**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**
**DEPOSITION OF WITNESS**
**SC.No.93/2025 - PW- 3**

| | |
|---|---|
| Name | திரு. செல்வா |
| Husband/Father Name | ரஞ்சன் |
| Village /Area | பொன்னை |
| Taluk | காட்பாடி |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 31 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 27.10.2025.

**(எதிரி ஆஜர்.).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். அசா.2 என்னுடைய மாமா அவருடைய தங்கையை நான் திருமணம் செய்திருக்கிறேன். அசா.1 என்னுடைய மைத்துனர் ஆவார். சம்பவ தினத்தன்று நானும் எனது மாமா பிரபாகரனும் இராணிப்பேட்டை சென்றிருந்தோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது).**

13.01.2016 அன்று இரவு 10.00 மணிக்கு நானும் அஜித், ராஜா மற்றும் பிரபாகரன் ஆகிய நாங்கள் பாத்ரூம் செல்வதற்காக குளத்தங்கரைக்கு சென்று அமர்ந்து பேசிக்கொண்டிருந்த போது அங்கு வந்த டில்லிராஜ் என்பவர் என்னை பார்த்து ஏன்டா என்னை பார்த்து சிரிக்கிராய் என்று கேட்டார் அதற்கு நான் உன்னை பார்த்து சிரிக்கவில்லை என்று சொன்னேன். டில்லிராஜ் அசிங்கமான வார்த்தைகாளால் திட்டி டில்லிராஜ் கண்ணத்தில் அறைந்ததாகவும்,

அஜித் என்பவர் டில்லராஜ் என்பவரை முறைத்து பார்த்ததாவும், அப்போது டில்லிராஜ் அசிங்கமான வார்த்தைகளால் திட்டி எதற்குடா என்னை முறைக்கிறாய் என்று அஜித் கண்ணத்தில் அடித்ததாகவும் அஜித்தும் டில்லிராஜ் கண்ணத்தில் அடித்ததகாவும் டில்லிராஜ் என்னை நீ அடித்துவிட்டாயா என்று சொல்லி தன்னுடைய பேண்ட் பாக்கெட்டில் மறைத்து வைத்திருந்த ஆபரேஷன் செய்யும் பிளேடால் அசிங்கமாக திட்டி அஜித்தின் இடது பக்க கழுத்தின் மீதும், இடது பக்க மார்பின் மீது பிளேடால் அறுத்ததாகவும் அஜித்திற்கு இடது பக்க கழுத்து லேசாக கிழிந்து விட்டதாகவும் அந்த நேரத்தில் அஜித் ஒதுங்காமல் இருந்திருந்தால் அஜீத்தின் கழுத்து நரம்பு கட் ஆகி அவர் உயிருக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்கும் என்றும் சண்டையை தடுத்த எனக்கு வலது முழங்கையில் காயம் ஏற்பட்டதாகவும், பிறகு ராஜா பிரபாகரன் இவர்கள் காயம் பட்ட அஜித்தை இரு சக்கர வானத்தில் சோளிங்கர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாகவும், மேல் சிகிச்சைக்காக வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு உள்நோயளியாக அட்மிட் செய்தாக போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரியை காப்பற்ற வேண்டும் என்பதற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u> இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.27 17:58:08 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.